**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.97/2009**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 3ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு ஜனவரி மாதம் 28 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராமசந்திரன் | மதம் | : இந்து |
| த/பெ | : கோவிந்தன் நாயுடு | ஜாதி | : -- |
| வயது | : 70 | கிராமம் | : வீரராகவபுரம் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**28.01.2026**
**பி.வா.சா. 3 திரும்ப அழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி**

2. 18.05.2005ம் தேதியிட்டு ரவிக்குமார் வகையறா என் மனைவி தனம்மாளுக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணம் இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் பி.வா.சா.ஆ 14 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பட்டா எண்.1313ல் தனம்மாள் பெயரில் உள்ள பட்டா இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(பட்டா பி.வா.சா.ஆ 15 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 14.11.2024ம் தேதியிட்ட வரி ரசீது அசல் தாக்கல் செய்கிறேன். **(வரி ரசீது பி.வா.சா.ஆ 16 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 1434ம் பசலிக்கான அடங்கல் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(அடங்கல் பி.வா.சா.ஆ 17 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வாதியின் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

(குறுக்கு விசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)